RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-340 | 05 டிசம்பர் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சினிமா விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பரப்பினால் போலீஸில் புகார் அளிக்கலாம்: உயர் நீதிமன்றம்



சென்னை, டிச.5

சூர்யா நடிப்பில் சமீபத்தில் வெளியான 'கங்குவா' படத்துக்கு சமூக வலைதளங்களில் எதிர்மறையான விமர்சனங்கள் எழுந்தன. இந்நிலையில் புதிதாக வெளியாகும் தமிழ்ப் படங்களை முதல் 3 நாட்களுக்கு விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பரப்ப தடை விதிக்கக்கோரி, நடப்பு தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் டி.சிவலிங்கம் என்ற சிவா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.


அதில், ''சமீபகாலமாக புதிதாக வெளியாகும் திரைப் படங்களை யூடியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் விமர்சனம் என்ற பெயரில் திட்டமிட்டு அவதூறு பரப்புவது அதிகரித்து வருகிறது. இந்த எதிர்மறை விமர்சனங்கள் படம் பார்க்க செல்லும் ரசிகர்களின் மனநிலையை மாற்றி, பல படங்களை தோல்வியடைய செய்கின்றன.

இதனால் பல கோடிகளை செலவிட்டு பெரிய பட்ஜெட்டில் படங்களை தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் கடும் நஷ்டத்துக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே புதிய படங்கள் வெளியாகும்போது அந்தப் படங்கள் பற்றி முதல் 3 நாட்களுக்கு விமர்சனம் செய்வதற்குத் தடை விதிக்க வேண்டும். அதேபோல விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பரப்ப யூடியூப், எக்ஸ் தளம் உள்ளிட்ட சமூக வலைதளங்களுக்கும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இதுதொடர்பாக விதிமுறைகளை வகுக்க மத்திய, மாநில அரசுகளுக்கும் உத்தரவிட வேண்டும்'' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு, நீதிபதி எஸ். சவுந்தர் முன் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்ரமணியன் ஆஜராகி, பல கோடி ரூபாய் செலவில் எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப் படங்களை விமர்சனம் என்ற பெயரில் அவதூறான எதிர்மறை கருத்துக்களைத் திட்டமிட்டு உள்நோக்கத்துடன் பரப்புகின்றனர். இதனால் முதல் 3 நாட்களுக்கு விமர்சனம் செய்ய தடை விதிக்க வேண்டும், என வாதிட்டார். இதையடுத்து நீதிபதி, விமர்சனம் என்ற பெயரில் அவதூறு பரப்பினால் அதுதொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது போலீஸில் புகார் அளிக்கலாம்.

அதே நேரம் பொதுவெளியில் விமர்சிப்பது என்பது தனிமனித கருத்து சுதந்திரம் என்பதால் பொத்தாம் பொதுவாக எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. சில படங்களுக்கு நேர்மறையான, ஆக்கப்பூர்வமான விமர்சனங்களும் வருகின்றன. எனவே மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக மத்திய, மாநில அரசுகளும், யூடியூப் நிறுவனமும் 4 வார காலங்களில் பதிலளிக்க வேண்டும், என உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளார்.

## "விவசாயிகளின் பொறுமையை சோதித்தால்..." மத்திய அமைச்சரை மேடையிலேயே எச்சரித்த குடியரசு துணைத் தலைவர்



மும்பை, டிச.5

நாட்டில் எந்த சக்தியாலும் விவசாயிகளின் குரலை நசுக்க முடியாது. விவசாயிகளின் பொறுமையை சோதித்தால் தேசம் பெரும் விலையை கொடுக்க வேண்டி இருக்கும் என்று மேடையிலேயே மத்திய விவசாயத் துறை அமைச்சரை எச்சரித்துள்ளார் குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர்.

மத்திய அரசின் வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் பருத்தி தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கான மத்திய நிறுவனத்தின் நூற்றாண்டு விழா மும்பையில் நேற்று (டிச.03) நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் கலந்து கொண்டார். அதே மேடையில் மத்திய விவசாயத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகானும் இருந்தார்.

அப்போது மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த குடியரசு துணைத் தலைவர், சிவராஜ் சிங் சவுகானை நோக்கி, "விவசாயத் துறை அமைச்சரே, உங்களுக்கு ஒவ்வொரு நிமிடமும் முக்கியம். விவசாயிகளுக்கு என்ன வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதை தயவு செய்து கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். வாக்குறுதியை ஏன் நிறைவேற்றவில்லை? அவர்களிடம் ஏன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை? வாக்குறுதியை நிறைவேற்ற நாம் என்ன செய்ய வேண்டும்? சென்ற வருடம் ஒரு போராட்டம் நடந்தது. இந்த ஆண்டும் ஒரு போராட்டம் நடக்கிறது. காலச் சக்கரம் சுழல்கிறது, நாம் எதுவும் செய்யவில்லை. விவசாயிகளுக்கும் அரசுக்கும் இடையே நம்மால் எல்லைக் கோட்டை உருவாக்க முடியுமா? விவசாயிகளுடன் ஏன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்பது எனக்கு புரியவில்லை. இந்த முயற்சி ஏன் இதுவரை நடக்கவில்லை என்பதே என் கவலையாக இருக்கிறது. உலக அரங்கில் நமது நற்பெயர் முன்னெப்போதையும் விட உயர்ந்திருக்கிறது. இப்படியான சூழலில், விவசாயிகள் ஏன் துயரத்தில் இருக்கின்றனர்? இது ஒரு தீவிரமான பிரச்சினை.

இதை இலகுவாக எடுத்துக் கொண்டால், நாம் நடைமுறையை புரிந்துகொள்ளவில்லை என்பதும், நமது கொளைகள் சரியான பாதையில் இல்லை என்பதும்தான் உண்மை. நாட்டில் எந்த சக்தியாலும் விவசாயிகளின் குரலை நசுக்க முடியாது. விவசாயிகளின் பொறுமையை சோதித்தால் தேசம் பெரும் விலையை கொடுக்க வேண்டி இருக்கும்" இவ்வாறு தெரிவித்தார்.

## திருவண்ணாமலை அருகே தரமற்ற பாலத்தைக் கட்டிய அதிகாரிகள் மீது நடவடிக்கை! டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை , டிச.5

"திருவண்ணாமலை அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 15.90 கோடி ரூபாயில் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட உயர்மட்ட பாலம் 90 நாட்களுக்குள்ளாக வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டிருப்பது திமுக ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட மொத்த பாலங்களின் தரத்தையும், உறுதித் தன்மையையும் கேள்விக்குறியாக்கி இருக்கிறது" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டை அடுத்த அகரம்பள்ளிபட்டு மற்றும் தொண்டமானூர் கிராமங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட உயர்மட்ட பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பாலம் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டிருப்பதால் தொண்டமானூர், கிருஷ்ணாபுரம், பெருந்துறைப்பட்டு, எடத்தனூர் உள்ளிட்ட 15 ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருப்பதோடு அத்தியாவசியத் தேவைகளுக்காக சுமார் 15கி.மீ சுற்றிச் செல்ல வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

15.90 கோடி ரூபாயில் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட உயர்மட்ட பாலம் 90 நாட்களுக்குள்ளாக வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டிருப்பது திமுக ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட மொத்த பாலங்களின் தரத்தையும், உறுதித் தன்மையையும் கேள்விக்குறியாக்கியிருக்கிறது. ஏற்கெனவே திமுக ஆட்சிப்பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில் அரசு நிர்வாகத்தின் அனைத்து துறைகளிலும் அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை ஊழல் மற்றும் முறைகேடு புகார்கள் குவிந்து வரும் நிலையில், தற்போது வெள்ளத்தில் உயர்மட்ட பாலம் அடித்துச் செல்லப்பட்டிருப்பது அந்த புகார்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, தரமற்ற முறையில் பாலத்தை கட்டி பொதுமக்களின் உயிர்பாதுகாப்பை கேள்விக்குறியாக்கிய அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு , இனிவரும் காலங்களில் கட்டப்படும் பாலங்களின் உறுதித் தன்மையை ஒருமுறைக்கு இருமுறை உறுதி செய்ய வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்," என்று அவர் கூறியுள்ளார்.

## புயல் பாதிப்புக்கு ரூ.2,000 வழங்குவது ஏற்புடையது அல்ல கடலூரில் அண்ணாமலை கருத்து




கடலூர்/விழுப்புரம், டிச.5

கடலூர் தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட திடீர்குப்பம், ஆல்பேட்டை உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த மக்களை தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "சாத்த னூர் அணை திறப்பதில் அரசு எந்தவித முன் ஜாக்கிரதையும் மேற்கொள்ளவில்லை. அதனால் கடலூரில் பெரும் சேதம் ஏற்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.2,000 அறிவித்திருப்பது ஏற்புடையது அல்ல. மிக்ஜாம் புயலுக்கு ரூ.6,000 வழங்கிய தமிழக அரசு, ஒரே அளவு மழை புயலுக்கு வித்தியாசம் ஏன்? இழப்புகளின் கணக்கின்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.10,500 வழங்க வேண்டும். மத்திய அரசு கடந்த மாதம் வரை ரூ.944 கோடி மாநில அரசுக்கு தந்துள்ளது. அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வாரி இறைத்ததில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால் மக்கள் எவ்வாறு கோபத்தை காண்பிப்பது? முதல்வர் நிதி கேட்பதற்கு எல்லா உரிமையும் உள்ளது. ஆனால் தற்போது ரூ.1,500 கோடி அளவிற்கு தமிழக அரசிடம் நிதி உள்ளது.

அதனை அவசர தேவைக்கு பயன்படுத்தலாம். தமிழகத்திற்கு ரூ.2 ஆயிரம் கோடி தேவையென்றால் மத்திய அரசு தரும். டெல்லி சென்று பாதிப்பு குறித்து பிரதமரிடமும், கட்சி தலைவர் நட்டாவிடமும் தெரிவிப்போம். மத்திய, மாநில அரசுகள் இணைந்து பல்வேறு பேரிடர்களில் சிக்கும் கடலூர் மாவட்டத்திற்கு சிறப்பு நிதி உருவாக்க வேண்டும். இது நாட்டிற்கு முன்னுதாரணமாக இருக்கும்" என்றார். கடலூரில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை மழை, வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்.

விழுப்புரம்: இதற்கிடையில் மரக்காணத்தில் பாதிக்கப்பட்ட உப்பளங்கள், இறால் பண்ணைகள் மற்றும் விவசாய நிலங்களை பார்வையிட்டார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கால்வாய்களை தூர்வார தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருக்காது.


போதிய அறிவிப்பு இல்லாமல் தென்பெண்ணையாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டதுதான் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்குக்கு காரணம்.

சாத்தனூர், பவானி சாகர், அமராவதி உள்ளிட்ட அணைகள் தூர்வாரப்படும் என தமிழக அரசின் பொதுப்பணித்துறை சார்பில் 2023 மே மாத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைக் கூட ஆளும் திமுக அரசு நிறைவேற்றவில்லை. தமிழக அரசு கால்வாய்களை தூர்வாருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இவற்றை செய்யாத வரை தமிழகத்தில் இதுபோன்ற வெள்ளப் பாதிப்புகள் தொடரும். நிதி வழங்கவில்லை என மத்திய அரசு மீது பழிபோடக்கூடாது. நெற்பயிர்களுக்கு காப்பீடு செய்வதற்கான கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என விவசாயிகள் விடுத்துள்ள கோரிக்கையை மத்திய அரசின் பார்வைக்கு கொண்டு செல்வோம்.

வெள்ளப் பாதிப்புகளுக்கு ரூ.2 ஆயிரம் கோடி வழங்க வேண்டும் என மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார். வெள்ளப் பாதிப்புகளை மத்தியக்குழு ஆய்வு செய்த பின்னர் தேசிய பேரிடர் நிதியிலிருந்து குறிப்பிட்ட தொகையை விடுவிக்கும் என்றார்.

## தென்கொரியாவில் அவசரநிலை பிரகடனம்: எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் ஒரே நாளில் வாபஸ்!



சியோல், டிச.5

தென்கொரியாவில் அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்ட ஒரு சில மணி நேரங்களில் எதிர்கட்சிகளின் போராட்டத்தால் அது ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

தொலைகாட்சி வாயிலாக நேற்று (டிச.03) பொதுமக்களிடம் உரையாற்றிய தென்கொரிய அதிபர் யூன் சாக் யோல் நாட்டில் வடகொரிய ஆதரவாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காகவும், அரசுக்கு எதிரான சக்திகளை ஒடுக்குவதற்காகவும் நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்படுவதாக அறிவித்தார்.

50 ஆண்டுகளில் தென்கொரியாவில் அவசரநிலை சட்டம் அமல்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த அவசரநிலை சட்டத்துக்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் 190 எம்.பி.க்கள் வாக்களித்தனர். தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்திலேயே போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்ற நுழைவாயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து தென் கொரிய அதிபர் யூன்சுக் யோலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். உடனடியாக அங்கு ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான போராட் டக்காரர்கள் ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முற்பட்டதால் ராணுவத்தினருக்கும் போராட்டக் காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட் டது. இதனையடுத்து அதிபரின் இந்த அவசரநிலை அறிவிப்பு செல்லாது என்று நாடாளுமன்ற சபாநாயகர் வூன் வொன் சிக் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த போராட்டக்காரர்கள் பலரும் ஆராவாரம் செய்து கொண்டாடினர். இந்த அவசரநிலை பிரகடன விவகாரம் பூதாகரமானதைத் தொடர்ந்து அதிபர் யூன் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன.

தென் கொரியாவை 20 ஆண்டு காலம் ஆட்சி செய்துவந்த பார்க் சங் ஹீ 1979ல் கொல்லப்பட்டபோது அங்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சேறு வீசியதை பெரிதுபடுத்தி அரசியலாக்க விரும்பவில்லை அமைச்சர் பொன்முடி பெருந்தன்மை



விழுப்புரம், டிச.5

விழுப்புரம் மாவட்டத்தில் 80 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி நிலங்கள் சேதமடைந்துள்ளது என அமைச்சர் பொன்முடி தெரிவித்தார். சேறு வீச்சு சம்பவம் குறித்து அவர் கருத்து தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப் பட்ட பகுதிகளை ஆய்வு செய்த அமைச்சர் பொன்முடி நேற்று மாலை விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: விழுப்புரம் மாவட்டத்தில் சராசரியாக 55 சென்டிமீட்டரும், விழுப்புரம் நகரில் 63.5 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

67 நிவாரண முகாம்களில் 4,906 பேர் தங்கி யுள்ளனர். தென்பெண்ணையாற்று கரையோரம் உள்ள திருக்கோவிலூர், திருவெண்ணெய்நல்லூர், விக்கிர வாண்டி பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டம் முழுவதும் 70 சதவீதம் மின் விநி யோகம் செய்யப்பட்டுள்ளது. மழைக்கு விக்கிரவாண்டி தாலுகாவில் 6 பேரும், திருவெண்ணெய்நல்லூர் தாலுகாவில் 2 பேரும், விழுப்புரம் தாலுகாவில் 5 பேரும், வானூரில் ஒருவர் என 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களின் குடும்பத் தாருக்கு முதல்வர் அறிவித்த ரூ. 5 லட்சம் நிவாரணத் தொகை வழங்கப்படும். மாவட்டத்தில் 26 நெடுஞ் சாலைகள் பாதிக்கப்பட்டு அதில் 17 சாலைகள் மறுசீரமைக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள 9 சாலைகள் விரைவில் சரிசெய் யப்படும். மாவட்டம் முழுவதும் 80 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் சேதமடைந்துள்ளது. பயிர்கள் என கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

நில உரிமையாளர்களுக்கு முதல்வர் அறிவித்த இழப்பீடு வழங்கப்படும். விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் தரைத்தளம் 2 அடி உயர்த்தப்பட உள்ளது. இதன்மூலம் வரும் காலங்களில் தண்ணீர் தேங்காத அளவுக்கு திட்டமிடப்படும். என் பின்புறம் சேற்றை வீசி அரசியல் ஆக்குவதற்காக செய்துள்ளனர்.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் யார் பதிவிட்டுள்ளாரோ அவர் கட்சியை சார்ந்தவர்கள் என்பது உங்களுக்கே தெரியும். என் மேல் மட்டுமல்ல உடன் வந்த ஆட்சியர் உள்ளிட்டவர்கள் மீதும் சேறு பட்டுள்ளது. இதனை பெரிதுபடுத்தி அரசியலாக்க விரும்பவில்லை. ரூ.6,000 இழப்பீடு அதிகம் அளிக்க வேண்டும் என பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மத்திய அரசிடம் பேசி கூடுதல் நிதி பெற்றுத்தர வேண்டும் என உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். ஓரிரு நாட்களில் வெள்ள நிவாரணப் பணிகள் தொடங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். அப்போது போக்குவரத்துறை அமைச்சர் சிவசங்கர், ஆட்சியர் பழனி உள்ளிட்டோர் உடனிருந்தனர். விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் பொன்முடி செய்தியாளர்களை சந்தித்தார். அருகில் அமைச்சர் சிவசங்கர், ஆட்சியர் பழனி.



அயோத்தியில் டிசம்பர் 6ம் தேதி பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை நதி பாலம், சந்திப்பு நிலையத்தில் இருப்பு பாதை சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி தலைமையில் காவல்துறையினர் நேற்று சோதனை மேற்கொண்டனர்.உடன் தனிப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா, தலைமை காவலர்கள் மணிகண்டன், செல்வம், மீனாட்சி சுந்தரம் விக்னேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

# தூத்துக்குடியில் அரசு மதுபான கூடத்தை அகற்றக்கோரி பொதுமக்கள் வழிபாடு

தூத்துக்குடி டிச.5

தூத்துக்குடி மாவட்டம் சேர்வைக்காரன் மடத்தில் மதுபான பார் உள்ளது. இந்த மதுபான பாரினால் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் பல சட்ட விரோதமான வன்முறைகள் நடந்து கொண்டிருக்கிறது

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை ஊர் பொதுமக்கள் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காததால் சேர்வைக்காரன் மடம் ஊர் பகுதி மக்கள் எல்லோரும் கூடி தெய்வத்திடம் இந்த மதுபான பாரை அகற்ற வேண்டும் என்று முறையிட்டு வருகின்றனர்

இந்த கூக்குரல் மாவட்ட ஆட்சியருக்கு கேட்குமா நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதிக்கு



எங்கள் குரல்கேட்கவில்லையா? சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவனுக்கு எங்க கூக்குரல் கேட்கவில்லையா ? மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவருக்கு எங்கள் கூக்கு குரல் கேட்கவில்லையா ? ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா அவர்களுக்கு எங்கள் கூக்குரல் கேட்கவில்லையா ? தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் வருங்கால விடிவெள்ளி என்று போற்றப்படும் உதயநிதி ஸ்டாலின். நடவடிக்கை எடுப்பாரா?

என்று பெண்கள் எல்லாம் பரிதவித்துக் கொண்டு வருகிறார்கள் தாங்கள் வணங்கும் தெய்வத்திடம் பொதுமக்கள் நீதிகேட்டு முறையீடு செய்தனர்..

# காரைக்குடியில் தேசிய பசுமை படை சார்பாக கழிவு பொருட்களை உபயோகமான பொருளாக மாற்றும் பயிற்சி பட்டறை

காரைக்குடி டிச.5





சிவகங்கை மாவட்டத்தில் தேசிய பசுமைப் படை சார்பாக கழிவுப் பொருட்களை உபயோகமான பொருளாக மாற்றும் பயிற்சி பட்டறை காரைக்குடியில் உள்ள அரியக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. தேவகோட்டை கல்வி மாவட்ட கல்வி அலுவலர் தொடக்கநிலை செந்தில்குமார் தலைமை வகித்தார்.

தேசிய பசுமை படை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ வரவேற்புரை ஆற்றினார். தேசிய பசுமை படை திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நடனம் பயிற்சிபட்டறை குறித்து விளக்கி பேசினார். பயிற்சிபட்டறையின் பயிற்சியாளர்கள் வாழை கலியமூர்த்தி யோகானந்தம் நடனம் ஆகியோர் வாழைசருகு வாழும் கலைப் பொருட்கள் வாழை இலையை கொண்டு பேனா பேனா தொட்டி விசிறி பொம்மைகள் செய்தல் காகிதங்களை கொண்டு கலைப்பொருட்களை உருவாக்குதல் சணல் கயிறுகள் நார் கயிறுகளைக் கொண்டு பயனுள்ள பொருட்கள் செய்தல் போன்ற செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

மாணவர்கள் மகிழ்ச்சியோடு பலவற்றையும் கற்று தங்கள் பள்ளிகளில் செயல்படுத்த உறுதி எடுத்துக் கொண்டனர். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி நன்றி கூறினர். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பயிற்சிக்கான உபகரணங்கள் தேநீர் மதிய உணவு வழங்கப்பட்டது. அரசு மேல்நிலைப்பள்ளி அரியக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி இலுப்பக்குடி ராமநாதன் நகராட்சி உயர்நிலைப்பள்ளி காரைக்குடி ஆலங்குடியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளி காரைக்குடி ADW உயர் நிலைப்பள்ளி உஞ்சனை ஆகிய பள்ளிகளில் இருந்து மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# மதுரை மாநகரில் மேலமடை மேம்பாலம் கட்டுமானப்பணி முன்னிட்டு மேலமடை சந்திப்பிலிருந்து தற்காலிகமாக போக்குவரத்து மாற்றங்கள்

மதுரை: டிச 5



றிசி. பெருங்காயம் சந்திப்பிலிருந்து மேலமடை சந்திப்பு வழியாக நகருக்குள் செல்லும் அனைத்து வகையான வாகன பொது வாகன போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப்படுகின்றது. இவ்வாகனங்கள் பாண்டி கோவில், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வழியாக நகருக்குள் செல்லலாம் அல்லது கல்மேடு சந்திப்பு, வண்டியூர், அம்பிகா தியேட்டர் சந்திப்பு வழியாக அண்ணாநகரை அடைந்து நகருக்குள் செல்லலாம்.

இதை தொடர்ந்து அத்தியாவசிய வாகனங்களின் போக்குவரத்து பொதுமக்களின் வசதிக்காக கீழ்கண்ட வகையில் போக்கவரத்து காவல்துறையில் சார்பில் மாற்றி அமைக்கப் படுகிறது.

### பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள்

றிசி. பெருங்காயம் சந்திப்பிலிருந்து மேலமடை சென்று வந்த இவ்வாகனங்கள் கோமதிபுரம் பெட்ரோல் பல்க் வரை சென்று பொதுமக்களின் வசதிக்காக மாணவர்களை ஏற்றி இறக்கி திரும்ப றிசி.பெருங்காயம் சந்திப்பு வந்து செல்லுமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 108 ஆம்புலன்ஸ் மற்றும் தனியார் ஆம்புலன்ஸ் வாகனங்கள்

றிசி. பெருங்காயம் சந்திப்பிலிருந்து மேலமடை சந்திப்பு வழியாக செல்லும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைக்கு செல்லும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் அனைத்தும் பாண்டிகோவில், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வழியாகவும் அல்லது கல்மேடு சந்திப்பு, வண்டியூர், அம்பிகா தியேட்டர் சந்திப்பு வழியாக அண்ணாநகரை அடைந்து நகருக்குள் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### அரசு மற்றும் தனியார் பேருந்துகள்

றிசி. பெருங்காயம் சந்திப்பிலிருந்து மேலமடை சந்திப்பு வழியாக நகருக்குள் செல்லும் அரசு மற்றும் மினி பேருந்துகள் அனைத்தும் கல்மேடு ரிங்ரோடு சந்திப்பு வண்டியூர், அம்பிகா தியேட்டர் சந்திப்பு வழியாக அண்ணாநகரை அடைந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### உள்ளூர் மற்றும் குடியிருப்பு வாசிகளின் வாகனங்கள்

உள்ளூர் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் மட்டும் அவர்களது அடையாள அட்டையை பயன்படுத்தி றிசி.பெருங்காயம் சந்திப்பிலிருந்து கோமதிபுரம் 6வது தெரு வரை சென்று கோமதிபுரம் 6வது தெரு, மருதுபாண்டியர் தெரு மற்றும் யானைக்குழாய் வழியாக மற்ற பகுதிகளுக்கு செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலமடை சந்திப்பிலிருந்து கோமதிபுரம் வழியாக PC.பெருங்காயம் சந்திப்பிற்கு செல்லும் அனைத்து பொது வாகன போக்குவரத்தும் முற்றிலும் தடை செய்யப்படுகின்றது.

### உள்ளூர் மற்றும் குடியிருப்பு வாசிகளின் வாகனங்கள்

மேலமடை சந்திப்பு வழியாக கோமதிபுரம் மற்றும் றிசி.பெருங்காயம் சந்திப்பிற்கு செல்லும உள்ளூர் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் மட்டும் மேலமடை சந்திப்பிலிருந்து அண்ணாநகர் 80 அடி ரோடு வழியாக சென்று கோச்சா காம்ளெக்ஸ் சந்திப்பு, சுகுணா ஸ்டோர் சந்திப்பு மற்றும் யானைக்குழாய் சந்திப்பில் அவர்களது அடையாள அட்டையை பயன்படுத்தி மருதுபாண்டியர் சாலை வழியாக கோமதிபுரம் பகுதிகளுக்கு செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள்

இச்சந்திப்பிலிருந்து றிசி.பெருங்காயம் சந்திப்பிற்கு செல்லும் பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள் மேலமடை சந்திப்பிலிருந்து அண்ணாநகர் 80 அடி ரோடு கோச்சா காம்ளெக்ஸ் சந்திப்பு, கருணா ஸ்டோர் சந்திப்பு. அம்பிகா தியேட்டர் சந்திப்பு வழியில் தங்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை ஏற்றி இறக்கி பின்பு வண்டியூர் அல்லது வைகை தென்கரை வழியாக நான்கு வழிச்சாலை அடைந்து தங்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு செல்லலாம்

### அரசு மற்றும் தனியார் பேருந்துகள்

மேலமடை சந்திப்பு வழியாக றிசி.பெருங்காயம் சந்திப்பிற்கு செல்லும் அனைத்து அரசு மற்றும் மினி பேருந்துகள் அனைத்தும் மேலமடை சந்திப்பிலிருந்து அண்ணாநகர் 80 அடி ரோடு கோச்சா காம்ளெக்ஸ் சந்திப்பு, சுகுணா ஸ்டோர் சந்திப்பு, அம்பிகா தியேட்டர் சந்திப்பு, வைகை வடகரை, வண்டியூர் கல்மேடு சந்திப்பு வழியாக நான்கு வழிச்சாலையினை அடைந்து சிவகங்கை சாலை அல்லது இராமநாதபுரம் சாலை செல்லலாம்.

அவசர நிமித்தம் காரணமாக மேற்படி பகுதிகளுக்கு வரக்கூடிய தண்ணீர், கேஸ் சிலிண்டர் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான கனரக வாகன போக்குவரத்து போக்குவரத்து காவல்துறையினரின் முன் அனுமதி பெற்று, அனுமதிக்கப்படும் நேரத்தில் அவர்கள் தெரிவிக்கும் வழித்தடத்தை பயன்படுத்தி செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மேம்பால கட்டுமானப்பணியானது போக்குவரத்து இடையூறின்றி நடைபெறும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள மேற்கண்ட தற்காலிக போக்குவரத்து மாற்றம் தடையின்றி செயல்பட கோமதிபுரம் 6வது தெரு மற்றும் மருதுபாண்டியர் தெரு ஆகிய தெருக்களில் வாகன நிறுத்தம் தடைசெய்யப்படுகிறது.

பொதுமக்கள், வியாபார பெருமக்கள், வாகன ஓட்டிகள் மற்றும் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் இந்த தற்காலிகமாக போக்குவரத்து மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிட மதுரை மாநகர காவல்துறை சார்பாக அறிவித்துள்ளது..

# கடையநல்லூரில் தூவல் குறும்படத்தின் பாராட்டு விழா



கடையநல்லூர் டிச05

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் முத்துக்கிருஷ்ணாபுரத்தில் இயங்கி வரும் ஸ்ரீ உலகா மேல்நிலைப்பள்ளியில் வைத்து தூவல்குறும்படத்தின் பாராட்டு விழா நடைபெற்றது, நிகழ்ச்சியில் வரவேற்புரையாக பள்ளியின் தலைமையாசிரியை இராமலட்சுமி சண்முகசுந்தரம் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கடையநல்லூர் காவல் ஆய்வாளர் ஆடிவேல் கலந்து கொண்டார்கள். தூவல் குறும் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள ஸ்ரீ உலகா மேல்நிலைப்பள்ளியின் தாளாளரும்முன்னாள்தலைமையாசிரியருமான சண்முகசுந்தரம் அவர்களுக்கு காவல் ஆய்வாளர் ஆடிவேல் பாராட்டு சான்றிதழ் மற்றும் அவார்டு வழங்கி நிகழ்ச்சி சிறப்பிக்கப்பட்டது, மேலும் நிகழ்ச்சியில் மாணவ மாணவியர்கள் மத்தியில் காவல் ஆய்வாளர் ஆடிவேல்

மாணவர்களை உற்சாகப் படுத்தியும். மாணவர்களின் முன்னேற்றம் மற்றும் விழிப்புணர்வு பற்றியும் பேசி சிறப்புரையாற்றினார். மேலும் சிறப்பு விருந்தினராக சினிமா லொக்கேசன் மேனஜரும், நடிகருமான சொக்கம்பட்டி சரவணன். சித்தா. வேட்டையன் படத்தின் நடிகரும் வலை படத்தின் இயக்குநர் மற்றும் நடிகருமான சுரேஷ், இன்ஸ்டா செலிபிர்ட்டி விக்னேஷ்குமார், அதிமுகவின் வடக்கு மாவட்ட மாணவரணி துணைச்செயலாளர் கருப்பையா தாஸ். நகர இளைஞரணி செயலாளர் ராஜேந்திரபிரசாத் குமந்தாபுரம் சந்திரன் கிருஷ்ணாபுரம் தியாகராஜன் லயன்ஸ் மண்டல தலைவர் சுப்பிரமணியன் என்று குட்டி மற்றும் ஸ்ரீ உலகா மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர் இசக்கிப்பாண்டி இப்ராகிம் ஆகியோர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் நன்றியுரையாக தூவல் குறும்படத்தின் நடிகர் சுதாகர் மற்றும் இயக்குநர் மதன்குமார் ஆகியோர் நன்றியுரையாற்றினர்...

## பத்திரம் காணவில்லை

12.01.1994ம் ஆண்டு மதுரை காமராசர் சாலை தென்புறம் கீழ்மாத்தூர் எண் 1. நீர்.சந்து கதவிலக்கம் 10. ஏ என்ற முகவரியில் வசித்து வந்த லேட் அன் . வெங்கட்டராமய்யர் மனைவியும் என் பாட்டியுமான (லேட்) **A.V.** சரஸ்வதியம்மாள் அவர்களால் என் தகப்பனாரும் மேற்படி சரஸ்வதியம்மாள் மகனுமான (லேட்) **A.V.** ரவீந்திரன் அவர்களுக்கு தாமரைப் பட்டி சார்பதிவகம் (**SRO**) 41. நிர். எண் 1049 (பக்கம் 205 207) **dt:** 12.01.1994 அன்று தான செட்டில்மெண்ட்டாக எழுதி பதிவு செய்யப்பட்ட வீட்டடி மனையின் பத்திரம் போடி மீனாட்சி திரையரங்கம் பாதையில் ஜெராக்ஸ் எடுக்க செல்லும் பொழுது 10.11.2024 அன்று காணாமற்போய்விட்டது கிடைக்கப் பெற்றோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு உதவ வேண்டுகின்றேன்காவல் துறை புகார் பதிவு எண் (**NK 24581285** (**dt** 1.12.2024)

**R.** கார்த்திகேயன், தபெ.**A.V.** ரவீந்திரன்,

ஶ்ரீ.ழிஷீ:14 கி கருப்பசாமி கோவில் 4வது தெரு போடிநாயக்கனூர் 625513

**Mob** 8438396770

# தே.கல்லுப்பட்டி வட்டாரத்தில் மக்காசோள பயிரில் படைப்புழு தாக்குதல் வேளாண்மை இணை இயக்குநர் தலைமையில் பேராசிரியர்கள் ஆய்வு

மதுரை: டிச 5



மதுரை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தே.கல்லுப்பட்டி வட்டார விவசாயிகள் மக்காசோளப் பயிரில் படைப்புழு தாக்குதல் குறித்து அளித்த புகார் மனுவினைத் தொடர்ந்து மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ப.சுப்புராஜ் தலைமையில் வேளாண்மை பல்கலைகழக பேராசிரியர்கள் மாரீஸ்வரி மற்றும் சுரேஷ், தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.இராமசாமி, வேளாண்மை அலுவலர் க.சரவணக்குமார் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களைக் கொண்ட குழுவினர் வி.ரெட்டிரபட்டி, ந.முத்துலிங்காபுரம், பி.சுப்புலாபுரம் பகுதிகளில் மக்காசோள வயல்களை ஆய்வுமேற்கொண்டனர். புரட்டாசி மற்றும் ஐப்பசி பட்டங்களில் பயிரிட்டிருந்த வயல்களில் படைப்புழு தாக்குதல் மிக அதிக அளவில் காணப்பட்டது.

வளர்ச்சி நிலையில் இருக்கும் பயிர்களுக்கு ஏக்கருக்கு 100மி.கி இமாம்மெக்டின் பென்சோயேட் அல்லது 100மிலி எப்பைனிடோரம் மற்றும் ஏக்கருக்கு 5 எண்கள் இனக்கவர்ச்சி பொறி, விளக்குப் பொறி 1 எண் என்ற அளவில் பயன்படுத்தி படைப்புழுவை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் மக்காசோள படைப்புழுவை கட்டுப்படுத்த, விதைக்கும் முன் கோடை உழவு செய்தல் மற்றும் கடைசி உழவின்போது ஏக்கருக்கு 100கிலோ வேப்பம் புண்ணாக்கு அடியுரமாக இட வேண்டும். வரப்பு பயிராக பயறு வகைகள், தீவனப்புல், எள், சூரியகாந்தி, சாமந்தி போன்ற வற்றைப் பயிரிடுவதால் படைப் புழுவின் தாக்குதலை கட்டுப் படுத்தலாம். தொடர்ந்து மக்கா சோள பயிர், பயிரிடுவதை தவிர்த்து பயிர் கழற்சி முறையில் மாற்று பயிராக இருங்கு சோளம் அல்லது பயறுவகை பயிர்களை சாகுபடி செய்யலாம். மேலும் பின்பருவ சாகுபடியினை தவிர்க்க வேண்டும். மானாவாரி நிலங்களில் ஆடி மற்றும் ஆவணிப் பட்டங்களில் மக்காசோளப் பயிர் சாகுபடி செய்வதால் படைப்புழு தாக்குதலை தவிர்ப்பதுடன் அதிக அளவு மகசூல் பெறலாம் என்று மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராஜ் தெரிவித்தார்.

# டிச.7ல் சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர்கள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்! ஆட்சியர் தகவல்

சிவகங்கை டிச.5

சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர்கள்/ படைப்பணியாற்றுவோர் / சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்றக்கூடத்தில்(D.D.C Hall-ல்) வருகின்ற 07.12.2024 அன்று மாலை 05.00 மணிக்கு நடைபெறவுள்ளது.



சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படைவீரர் / படைவீரர் / சார்ந்தோர் / தற்போது இராணுவத்தில் பணிபுரியம் படைவீரரின் குடும்பத்தினர்கள் 07.12.2024 அன்று நடைபெறும் முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், தங்களது கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை அளித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி கமலகண்ணன் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு, மண்டலத்திற்கு ஒரு காம்பாக்டர் வாகனம் வீதம் ரூ.3.00 கோடி மதிப்பில் 5 காம்பாக்டர் வாகனங்களை தாம்பரம் மாநகராட்சி டாக்டர் அம்பேத்கர் திருமண மண்டபம் வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக் குழு தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப்அண்ணாதுரை, ச.ஜெயபிரதீப்,டி.காமராஜ், எஸ்.இந்திரன், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த ஊரான பெரியகுளத்தில் உள்ள அவரது இல்லத்தில் அதிமுக உரிமை மீட்பு குழு தகவல் தொழில்நுட்ப தேனி மாவட்ட துணைத் தலைவர் குணமுத்து பேத்தி தேஷிகாவின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஓ.பன்னீர்செல்வத்திடம் நேரில் சென்று வாழ்த்து பெற்றார்.

# பழனியில் செயின் பறிப்பு திருடனை விரட்டி பிடித்த ஊர்க்காவல் படையினருக்கு குவியும் பாராட்டு

பழனி டிச05

திண்டுக்கல் மாவட்டம் பழனி திருஆவினாங்குடி கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு வெளியே வந்த பெண்ணிடம் சுமார் 2 1/2 பவுன் தங்க செயினை பறித்துக் கொண்டு ஓடிய பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மகேஷ் குமார் வயது 39

(த/பெ) ஆறுமுகம் செட்டித்தெரங்காடு மூலக்காடு போஸ்ட் பாலக்காடு கேரளா என்பவரை பொதுமக்கள் மற்றும் ஆவினங்குடி போலீஸ் பூத்தில் பணியில் இருந்த ஊர்க்காவல் படையினர் துரத்தி பிடித்தும் உடனே அடிவாரம் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து எதிரி மற்றும் எதிரி பறித்து சென்ற செயினை கைப்பற்றியும் எதிரி மீது




அடிவாரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர் இந்த செயலால் ஊர்காவல் படையினரை வெகுவாக பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர் ஊர்க்காவல் படையினரை பணியமர்த்திய பழனி உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தனஞ் ஜெயன் மற்றும் பழநி நகர காவல் ஆய்வாளர் மணிமாறன் அவர்களையும் பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்..



விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் கோயில் நிர்வாகம் சார்பில் 2 லட்சம் மதிப்புள்ள அத்தியாவசிய பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கு சென்று நேற்று ஜீயர் வழங்கினார் உடன் நகர மன்ற தலைவர் T.N. முருகன் மற்றும் குணா நகரமன்ற கவுன்சிலர் கலந்து கொண்டார்கள்.

# தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சைபர் குற்றங்களும் பாதுகாப்பு வழிமுறைகளும் பற்றிய கருத்தரங்கம்

தேனி டிச.5

தேனி மாவட்டம் வட புதுப்பட்டியில் உள்ள தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில்“சைபர் குற்றங்களும் பாதுகாப்பு வழிமுறைகளும்“ பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி செயலாளர் காசிபிரபு வரவேற்றார்.தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின் முறையின் தலைவர் ராஜமோகன் விழாவிற்கு தலைமை தாங்கினார். உபதலைவர் கணேஷ், பொதுச்செயலாளர் ஆனந்தவேல், மற்றும் பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக சைபர் கிரைம் பிரிவு மாவட்ட காவல்துறை கூடுதல் துணை கண்காணிப்பாளர் சுகுமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் அவர் பேசுகையில் “ சமூக வலைதளம் சமூகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை




செய்திகளை உடனுக்குடன் அனுப்ப பணவரிவர்த்தனை மேற்கொள்ள போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே சமூக வலையதளங்கள் பயன்பட்டு வந்தது. ஆனால் தற்போது சமூக வலைதளங்களில் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கோடிக்கணக்கில் அதிகரித்து வருகிறது. அவசிய தேவைகளை தவிர்த்து அதையும் தாண்டி மக்கள் சமூக வலை தளங்களில் தங்கள் பொழுதை அதிகம் செலவிடுதும் தற்போதைய குற்றங்களுக்கு மிக முக்கிய காரணமாக உள்ளன. ஆகவே சமூக வலைதளத்தை பாதுகாப்பு முறையில் கையாள வேண்டும்,பெண் குழந்தைகள் தங்களது புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பதிவிட வேண்டாம் அதேபோல் ஆன்லைன் விளையாட்டின் மூலம் பணத்தை இழக்க வேண்டாம்.ஆன்லைன் நிதி தொடர்பான புகார்களுக்கு 1930 என்ற எண்ணிற்கு இலவசமாக தொடர்பு கொள்ளலாம்“ என்று பேசினார்.இந்நிகழ்வில் சைபர் கிரைம் காவல் ஆய்வாளர்கள் வெங்கடாசலம்,

ரேணுகா தேவி,சைபர் கிரைம் காவல்துறை ஆய்வாளர் அழகு பாண்டி ஆகியோர் கலந்து கொண்டு கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கப்படுத்தும் விதமாக பேசினர்.நிகழ்ச்சியின் முடிவில் அகடமி முதல்வர் முனைவர் கோமதி நன்றி கூறினார்.

# திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்த திமுகவினர்

கள்ளக்குறிச்சி டிச05

கள்ளக்குறிச்சி மாவட்டம் திராவிட முன்னேற்ற கழகத் தலைவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சரும் திமுக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாட்டின் துணை முதல்வருமான .உதயநிதி ஸ்டாலின் அறிக்கையிபடி தமிழக வனத்துறை அமைச்சருமான முனைவர் கா.பொன்முடி மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் .டாக்டர். பொன்.கௌதமசிகாமணி வழிகாட்டுதல் படி திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், குலதீபமங்கலம் ஊராட்சியில் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கில் அடித்து செல்லப்பட்ட நீர் மோட்டாரினால் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டினால் ஏற்பட்ட நிலைமையை சரி செய்யும் வகையில் தண்ணீர் டேங்க் கொண்டு, கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சி குழு துணைப்பெருந்தலைவரும், மாவட்ட திட்டமிடல் குழுவின் உறுப்பினரும், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய செய





லாளரும், மூத்த வழக்கறிஞருமான மு.தங்கம் குச்சிப் பாளையம்,கலர் பகுதி,மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்பை சார்ந்த பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்தார்.

உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், செல்வகணேஷ்,பணி மேற் பார்வையாளர் குமார், ஜோதி,மணி ராஜ்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆனந்தி, கிராம நிர்வாக அலுவலர் பாக்கியராஜ்,கிராம உதவியாளர் சுந்தர்,மாவட்ட பிரதிநிதி அகஸ்தியர் மூலை ஆனந்தன்,கிளை செயலாளர் குச்சிப்பாளையம் ராஜேந்திரன், இளைஞரணி பாலமுருகன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பாலு என்கிற பாலமுருகன், பொருளாளர் தண்டபாணி, ஒன்றிய கவுன்சிலர் சொரையப்பட்டு சுகவனராஜன், வழக்கறிஞர் நிஜாம், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இம்ரான் மற்றும் குலதீபமங்கலம் கிளை கழகத்தினர்கள் இருந்தனர்.

# உதயநிதி ஸ்டாலின் 47வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி சார்பில் நலத்திட்ட உதவி-மாபெரும் பொதுக்கூட்டம்

பம்மல் டிச05

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 47வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி சார்பில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவி மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிகழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பெரியார் நகர் பழனியப்பா தெரு நாகல்கேணியில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் 47வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன், உயர்க்கல்வித்துறை அமைச்சர் மாநில வர்த்தகர் அணி துணை தலைவர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றி 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், தலைமை



கழக இளம் பேச்சாளர்கள் மறைமலை நகர் ரிஷி சந்தோஷ், பம்மல் வீ.தினேஷ், பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, பம்மல் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.அ.சத்திய பிரபு, தொழிலதிபர் பம்மல் மு.ஏ இப்ராஹிம், பகுதி கழக அவைத் தலைவர் ப.காளேஸ்வரன், பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன், என்.கே. ரவிச்சந்தின், இரா.கந்தவேலு, ரா.கோகுல், சு.மனோகரன், வட்ட கழக செயலாளர்கள் மா.சாலா(எ)சுகுமாரன்,



ஏ.அனிஸ்டன், வி.எஸ். ஜெகநாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ், பி.ஸ்ரீதர், மாமன்ற உறுப்பினர்கள் ஆ.மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், மற்றும் ம.நிக்சன், சி.மதியழகன், வே.க.தன்ராஜ், வே.க.புஷ்பராஜ், செ.அமிர்த ராஜ், பி.சொர்ணம், மு. சதீஷ், சி.வெள்ளை யப்பன், அ.வினோத்குமார், சி.என்.எத்தி ராஜ், த.சுபிதா, என்.ஜீவா, ஆர்.என்.கன்னியப் பன், கே.சங்கர், எஸ்.பீர்முகமது, ஆர்.ரங்கன், டி.கண்ணன், ஆர்.சுபாஷ்,11வது வட்ட நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், மாவட்ட மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியாக பகுதி துணை செயலாளர் என்.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.



மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி கூடடராங்கில் “அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவை 2024” தொடங்கி வைத்து மாற்றுத்திறனாளிகளுக்குஅரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய மாவட்ட ஆட்சியர் செள.சங்கீதா.

## மானாமதுரை அருகே ரயில்வே ஊழியரை வெட்டிய வழக்கில் சிறுவன் உட்பட இரண்டு பேர் கைது

மானாமதுரை டிச.5

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கீழப்பசலை கிராமத்தைச் சேர்ந்தவர் பாலமுருகன் இவர் கொன்னக்குளம் ரயில்வே நிலையத்தில் நிலை அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் அதே ஊரைச் சேர்ந்த உறவினர் தங்கமணி தங்கராசு இருவருக்கிடையில் கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற முளைப்பறி திருவிழாவின்போது தகராறு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இருதரப்பினர் மீது மானாமதுரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்து வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பாலமுருகன் தனது விளைநிலத்திற்கு உர மூட்டை தூக்கி கொண்டிருந்தபோது அங்கு வந்த தங்கமணியின் மகன்கள் தர்ஷித் என்ற தர்ஷித் கண்ணன் (19) சிறார் (17) ஆபாசமாக பேசி கையில் வைத்திருந்த கூர்மையான ஆயுதத்தால் பாலமுருகனின் தலையில் வெட்டி உள்ளனர். பாலமுருகனின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்தவுடன் தங்கமணியின் மகன்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

காயமடைந்த பாலமுருகன் மானாமதுரை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று வந்தார். அங்கு புகார் வாங்க சென்ற காவலர்களிடம் பாலமுருகனின் உறவினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் பாலமுருகனை தாக்கிய தங்கமணியின் மகன்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு அவர்களை காவல்துறையினர் நேற்று கைது செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தை குப்பையில்லா குமரி மாவட்டமாகவும், பசுமை மாவட்டமாகவும், முழு தூய்மையான மாவட்டமாகவும் மாற்றிடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட சுற்றுச்சூழல் துறையின் சார்பில் மீண்டும் மஞ்சப்பை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் கன்னியாகுமரி கடற்கரை சாலை, மகாதானபுரம் முதல் ஜீரோ பாயிண்ட வரை, திரிவேணி சங்கமம், கதிரவன் உதயம் மற்றும் மறையும் பகுதி உள்ளிட்ட கன்னியாகுமரி கடற்கரை பகுதிகளில் 100 மஞ்சப்பை குறித்த விளம்பர பதாகைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின் படி சுற்றுச்சூழல் பொறுப்பு செயற்பொறியாளர் த.பாரதி மேற்கொண்டு வருகிறார்கள்.




## ஔவையார் விருதுக்கு விண்ணபிக்க தென்காசி ஆட்சியர் அழைப்பு

தென்காசி, டிச.5

தென்காசி மாவட்டத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தவர்கள் ஔவையார் விருதுக்கான கருத்துருக்களை தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தின் (https://awards.tn.gov.in) வழியாக விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தகவல் தெரிவித்துள்ளார்



சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிகச்சிறந்து விளங்கும் மகளிருக்கு, சர்வதேச மகளிர் தினவிழா மார்ச்8ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் ஔவையார் விருதானது முதலமைச்சரால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோருக்கு ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலை, பொன்னாடை மற்றும் சான்றிதழ் வழங்கப் படுகிறது.

அதன்படி 2025 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தின விழாவின் போது பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவைபுரிந்த ஒருவருக்கு ஔவையார் விருது மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் வழங்கப்படவுள்ளது.

ஔவையார் விருதுக்கான கருத்துருக்களை தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தின் (https://awards.tn.gov.in) வழியாக 31.12.2024க்குள் அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.




தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகரில் அதிகப்படியான ஒலி எழுப்பக்கூடிய வாகனங்களில் உள்ள ஏர் ஹாரன்களை போக்குவரத்து காவல் ஆய்வாளர் தட்சணாமூர்த்தி மற்றும் உதவி ஆய்வாளர் செல்வகுமார்,சிறப்பு உதவி ஆய்வாளர் மணி, காதர் செரிப் ஆகியோர் கலந்துகொண்டு பேருந்து மற்றும் லாரி மற்றும் ஆட்டோக்களில் இருந்த ஹாரன்களை அப்புறப்படுத்தியும், வழக்கு பதிவு செய்தும் அனுப்பினார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் பள்ளி கல்விதுறையின் சார்பில் திருப்பூர் வடக்கு,தெற்கு பல்லடம் மற்றும் காங்கேயம் வடடத்திற்குட்பட்ட பள்ளிகளில் தலைமையாசிரியர்களுடன் பொது தேர்வுகளின் தேர்ச்சிவிகிதத்தை அதிகரித்தல் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.உடன் மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் உதயகுமார் உதவி திட்ட அலுவலர் அண்ணாதுரை தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் உள்ளனர்...

## மின்சார செலவை குறைக்கும் வகையில் மின் மோட்டாரை 50 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டம்! ராமநாதபுரம் ஆட்சியர் அறிவிப்பு

ராமநாதபுரம், டிச.5

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

தமிழக அரசு, விவசாயத்தில் மின்சார செலவை குறைக்கும் வகையில், குறைந்த மின்சாரத்தில் அதிக திறனுடன் இயங்கும் மின் மோட்டாரை 50 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழையபழுதடைந்த பம்ப்செட்டுகளை தொடர்ந்து பயன்படுத்துவதால் மின் நுகர்வு அதிகமாவதுடன், பயிருக்கு நீர் பாய்ச்சும் நேரமும் அதிகமாகிறது. இதன் காரணமாக மின் மாற்றியும் சுமை தாங்காமல் பழுதாகிறது.

இந்த சிக்கலை தீர்க்கவே திறன் குறைந்த மற்றும் பழுதான மின்மோட்டார்களை மாற்ற விரும்பும் சிறு குறு விவசாயிகளுக்கும், புதிய கிணறுகளை உருவாக்கும் சிறுஂகுறு விவசாயிகளுக்கும், புதிய மின் மோட்டார்; வாங்குவதற்கு அரசு 50மூ மானியம் அல்லது



அதிகபட்சமாக ரூ.15,000ஃ மானியம் வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் தங்களது பழுதடைந்த பழைய மின்மோட்டாரை மாற்றி, அதிக திறனுள்ள குறைந்த மின் செலவில் இயங்கும் புதிய மின்மோட்டார் பொருத்துவதற்கு 80 எண்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

### மொபைல் போன் மூலம்

விவசாயிகள் தங்கள் நிலங்களில் உள்ள மின்சார மோட்டார்களை தொலைவில் இருந்து அல்லது தங்கள் வீட்டில் இருந்தபடியே இயக்கும் கருவி மானியத்தில் வழங்;கப்பட்டு வருகிறது. விவசாயிகள் வயல்களுக்கு மின்சார மோட்டார் அருகே சென்று ஆன், ஆப் செய்ய தேவையில்லை. கிணற்றில் நீர் இல்லாதபோது தானாகவே நீர் இறைப்பதை நிறுத்தி விடும். விவசாயிகள் கிணறுகளுக்கு செல்லாமலே தங்களது இருப்பிடத்தில் இருந்தே தங்கள் மொபைல் போன் மூலம் பம்புசெட்டுகளை இயக்கவும், கண்காணிக்கவும் முடியும். தங்கள் செல்போனிலே மோட்டார் ஒடும் நேரத்தை பார்க்க முடியும். தீ மற்றும் திருட்டு குறித்து செல்போனுக்கு எச்சரிக்கை அழைப்பு அனுப்பப்படும். மழை தொடங்கும்போது மோட்டார்கள் தானாகவே நின்றுவிடும்.

இந்த செல்போனால் இயங்கும் பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகள் 50 சதவீத மானியத்தில் அதிகபட்சம் ரூ.7 ஆயிரம் வரை மானியமாக தற்போது வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களில் பயன்பெற விரும்புவோர் தங்களது நிலத்தின் கணினி சிட்டா, அடங்கல், நீர் ஆதாரம் இருக்கும் இடத்தின் வரைபடம், ஆதார் கார்டுநகல், மும்முனையின் இணைப்பு எண் விவரம் இவற்றுடன் தங்கள் விண்ணப்பத்தை இராமநாதபுரம், திருப்புல்லாணி, மண்டபம், ஆர்.எஸ். மங்கலம், திருவாடானை வட்டார விவசாயிகள் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கருவூலக கட்டிட முதல் தளத்தில் அமைந்துள்ள

உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, இராமநாதபுரம் (கைபேசி எண்: 8610203117) அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் மற்றும் பரமக்குடி, நயினார்கோயில், முதுகுளத்தூர்,போகலூர், கமுதி, கடலாடி வட்டார விவசாயிகள் பரமக்குடி, 5ஃ339யு, சௌகத்அலி தெருவிலுள்ள உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, பரமக்குடி (கைபேசி எண்: 96553 04160) அலுவலகத்திலும் விண்ணப்பிக்கலாம் அல்லது அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன், செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## திண்டுக்கல் பள்ளியில் 712 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.77.00 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

திண்டுக்கல் டிச.5

திண்டுக்கல் ஒம்சாந்தி சிபிஎஸ்இ மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, தலைமையில், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

முன்னாள் முதல்வர் கலைஞர் ஆட்சி காலத்தில், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன. அந்த வகையில் சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு கனிவுடன் உதவிட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மற்ற துறைகளை காட்டிலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 20232024 ஆம் நிதியாண்டில் மட்டும் பல்வேறு திட்டங்களில் கீழ் 8,869 பயனாளிகளுக்கு ரூ.20.68 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் 90 பயனாளிகளுக்கும், கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 146 பயனாளிகளுக்கும், மூன்று சக்கர சைக்கிள் 60 பயனாளிகளுக்கும், மடக்கு சக்கர நாற்காலி 80 பயனாளிகளுக்கும், சிறப்பு சக்கர நாற்காலி 30 பயனாளி களுக்கும், பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி 15 பயனாளிகளுக்கும், ஊன்றுகோல் வழங்கும் திட்டத்தில் 50 பயனாளிகளுக்கும், நவீன செயற்கை அவயம் 8 பயனாளிகளுக்கும், செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு காதொலி கருவி 180 பயனாளிகளுக்கும், பார்வையற்றவருக்கு கருப்பு கண்ணாடி 50 பயனாளிகளுக்கும், பார்வையற்றவருக்கான பிரெய்லி கைக்கடிகாரம் 50 பயனாளிகளுக்கும் என மொத்தம் 759 பயனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பயனாளிகள் தேர்வு செய்வதற்கு வட்ட வாரியாக சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. மொத்தம் 11 இடங்களில் நடைபெற்ற முகாமில் 1200க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்டவர்களில் 712 மாற்றுத்திறனாளிகள் உதவி உபகரணங்கள் வழங்க தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி, மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் 8, பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி 21, மூன்று சக்கர சைக்கிள் 30, மடக்கு சக்கர நாற்காலி 86, ஊன்று கோல்கள் 14, எல்போ கிரட்சஸ் 104, ஊன்றுகோல் (கைத்தடி) 53, ரோலேட்டர் (நடைப்பயிற்சி சாதனம்) 17, மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு சக்கர நாற்காலி 8, தொழுநோயால் பாதிக்கப்படவர்களுக்கு சாதனம் (கிஞ்லி ரிவீமீ) 7, காதொலி கருவி 206, சுமார்ட் போன் 9, சிறப்பு குழந்தைகளுக்கான கல்வி கற்பிக்கும் சாதனம் 328, செயற்கை கால் 63, செயற்கை கை 12, முடநீக்கு சாதனம் 58 ஆகியவை வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெற்ற சிறப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 712 மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்டீல் அத்தரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் மூலம் ரூ.77.00 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் இன்றைய விழாவில் வழங்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலனில் அதிக முக்கியத்துவம் அளிக்கும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் செயல்பட்டு வருகிறார், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணைமேயர் ச.ராஜப்பா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் நா.சாமிநாதன், ஸ்டீல் அத்தரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் தலைமை நிர்வாக அலுவலர் கௌதம்தாஸ், அலிம்கோ நிர்வாகி சிவக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161